நாள்: 17.07.2014

## இன்றைய வேளாண் செய்திகள்

**கூடலூர் நெல் ஆராய்ச்சி மையத்தில் புதிய ரகங்கள் நடவு பணி மும்முரம்**

**கூடலூர்**: ஆராய்ச்சிக்காக, 50 வகையான நெல் ரகங்களை நடவு செய்யும் பணி, கூடலூர் வீரிய ஒட்டு நெல் ஆராய்ச்சி மையத்தில் நடந்து வருகிறது.நீலகிரி மாவட்டம், கூடலூர் புளியம்பாறையில், கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக வீரிய ஒட்டுநெல் ஆராய்ச்சி மையத்தில், புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட நெல் வகைகள் குறித்த ஆராய்ச்சி நடத்தப்படுகிறது.தற்போது, தேசிய அளவில் பல்வேறு பகுதிகளிலும் பயிரிட்டப்படும், 50 புதிய வகை நெல் ரகங்களை, ரகம் வாரியாக நடவு செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆராய்ச்சி மைய தலைவர் மனோன்மணி கூறுகையில், "கோ 50 நெல் வகை மூலம், கூடலூர்

பகுதியில் அதிக மகசூல் கிடைத்துள்ளது. இந்த ரகத்தை விவசாயிகள் பயிரிட துவங்கியுள்ளனர். நெல் விதைக்கப்பட்ட, 20 நாட்களில் நாற்றுகளை பறித்து, வயல்களில் நடவு செய்ய முடியும். 135 நாட்களில் மகசூல் கிடைக்கும். இப்பகுதியில் இதுவரை, 250 கிலோ நெல் விதை விற்பனை ஆகி உள்ளது. இங்கு, 50 ரக நெல் நாற்றுகள் நடவு செய்யப்படுகின்றன," என்றார்.

## பச்சை மிளகாய்விலை உயர்வு



**சேலம்**: தமிழகத்தில் நிலவும் வறட்சி காரணமாக, பச்சை மிளகாய் விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லை. இதனால், மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் பச்சை மிளகாய் வரவில், கடும் சரிவு ஏற்பட்டு தட்டுப்பாடு நிலவுகிறது.கடந்த வாரம், உழவர் சந்தைகளில், கிலோ, 22 ரூபாய்க்கு விற்ற பச்சை மிளகாய் தற்போது, 48 ரூபாயாக உயர்ந்துள்ளது. வெளி மார்க்கெட்டில், கிலோ 30 ரூபாய்க்கு விற்றது, தற்போது, 60 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

## உத்திரகண்டில் தொடரும் கனமழை

**டேராடூன்** : உத்திரகண்ட் மாநிலத்தில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் அம்மாநிலத்தில் உள்ள ஆறுகளில் வெள்ளநீர் அபாய அளவை தாண்டிச் செல்கின்றன. இதனால் சர்தம் புனித யாத்திரை பாதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் யாத்திரீகர்களும், அப்பகுதி மக்களும் பாதுகாப்பாக உள்ளதாக உத்திரகண்ட் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## ஆடி மாத பிறப்பை முன்னிட்டு மேச்சேரி சந்தையில் ஆடு விலை கிடுகிடு உயர்வு

**மேட்டூர்**: ஆடி மாதப்பிறப்பை முன்னிட்டு, மேச்சேரி சந்தையில், நேற்று ஆடுகள் விலை அதிகரித்த போதிலும், பொதுமக்கள் போட்டி, போட்டு வாங்கி சென்றனர். மேச்சேரியில் வாரம்தோறும் புதன்கிழமை ஆட்டு சந்தை கூடும். வறட்சியாலும், தென்மேற்கு பருவமழை பொய்த்ததாலும், கடந்த சில வாரங்களாக, விவசாயிகள் கொள்முதல் செய்ய முன்வராததால், மேச்சேரி சந்தையில் ஆடுகள் விலை குறைவாக இருந்தது.

ஆடி மாதம் முழுவதும் காவிரி கரையோர மக்கள், தங்கள் குலதெய்வ கோவில் மற்றும் எல்லைதெய்வங்கள் கோவிலில் கிடா வெட்டி நேர்த்தி கடன் செய்வது வழக்கம். மேலும், ஆடி, 18 பண்டிகையன்று உறவினர்களை அழைத்து பொதுமக்கள் கிடா விருந்து வைப்பர். இதனால், ஆண்டுதோறும் ஆடி மாதம், மேச்சேரி சந்தையில் ஆடுகளின் விலை அதிகரிக்கும். இன்று ஆடி மாத பிறப்பு என்பதால், நேற்று மேச்சேரி சந்தையில், ஆடு வாங்குவதற்காக, வியாபாரிகள் விவசாயிகள் மட்டுமின்றி, பொதுமக்களும் அதிகமாக வந்தனர். இதனால், விற்பனைக்கு வந்த ஆடுகள், சில மணிநேரத்துக்குள் விற்பனையாகி விட்டது. மேலும், கடந்த வாரத்தை விட, நேற்று ஆடுகள் விலை, 500 ரூபாய் முதல், 1,000 ரூபாய் வரை கூடுதலாக விற்பனையானது.

## காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பு

**மேட்டூர்**: நடப்பாண்டில் இரண்டாம் கட்டமாக, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. கடந்த இரு நாட்களாக, காவிரி உற்பத்தியாகும் குடகுவில், கனமழை பெய்கிறது. இதனால், கர்நாடகாவின், கே.ஆர்.எஸ்., கபினி அணை நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நேற்று கபினிக்கு வினாடிக்கு, 22,000 கன அடி நீர்வந்த நிலையில், 10,000 கன அடி நீர் காவிரியில் திறக்கப்பட்டது. கபினி நிரம்ப இன்னும், 2.5 டி.எம்.சி., நீர் தேவை. நேற்று முன்தினம், 18,300 கன அடியாக இருந்த கே.ஆர்.எஸ்., நீர்வரத்து, நேற்று, 24,500 கன அடியாக அதிகரித்தது. அணையில் இருந்து வினாடிக்கு, 8,000 கன அடி நீர் திறக்கப்பட்டது.

இரு அணைகளில் இருந்தும், காவிரியில், 18,000 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. இதில், காவிரி கரையோர பாசனத்துக்கு போக, மீதமுள்ள நீர் மேட்டூர் அணைக்கு வந்து சேரும். இதனால், மேட்டூர் அணை நீர்வரத்து இன்று காலை முதல், படிப்படியாக அதிகரிக்கும். நேற்று மேட்டூர் அணை நீர்மட்டம், 47.430 அடியாகவும், நீர் இருப்பு, 16.232 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 1,008 கன அடி நீர் அணைக்கு வந்து கொண்டிருந்தது.

## கால்நடை பாதுகாப்பு சிறப்பு முகாம்: 216 கிராமங்களில் நடத்த ஏற்பாடு

**ஈரோடு**: ஈரோடு மாவட்டத்தில், நடப்பாண்டு, 216 கிராமங்களில், கால்நடை பாதுகாப்பு சிறப்பு முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டம்,

குமாரவலசு பஞ்சாயத்துக்கு உட்பட்ட, வெங்கிட்டாம்பாளையத்தில், சிறப்பு கால்நடை பாதுகாப்பு சிறப்பு முகாம் நடந்தது.

முகாமை துவக்கி வைத்து, கலெக்டர் சண்முகம் பேசியதாவது:

வருவாய்த்துறை சார்பில், "மக்களைத்தேடி வருவாய்த்துறை' என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கால்நடை பராமரிப்புத்துறை மூலம், மருத்துவ வசதி இல்லாத, குக்கிராமங்களில் உள்ள கால்நடைகளை தேடி சென்று, அவற்றுக்கு சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. இந்த திட்டம் மூலம், கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை மற்றும் தடுப்பூசிகள் முறையாக போடப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில், நடப்பு நிதியாண்டில், 216 குக்கிராமங்களில், கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் மூலம், சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. இதில், கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை, அறுவை சிகிச்சை, குடற்புழு நீக்கம், சினை பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல், தடுப்பூசி, சினை தரிக்காத கால்நடைகளுக்கு சிறப்பு சிகிச்சைகள் இலவசமாக செய்யப்படும். எனவே, இந்த பகுதிகளை சேர்ந்த கால்நடை வளர்ப்போர், இந்த சிறப்பு முகாம்களில், தங்கள் கால்நடைகளை அழைத்து வந்து, இலவசமாக, சிகிச்சை மற்றும் தடுப்பூசிகளை போட்டு பயன்பெறலாம். இவ்வாறு அவர் கூறினார். கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் ஜெயராமன், துணை இயக்குனர் பிரகாசம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பருவ மழையை எதிர்நோக்கும் அந்தியூர் பகுதி விவசாயிகள்

**அந்தியூர்**: அந்தியூர் அடுத்த வெள்ளித்திருப்பூர், பூனாச்சி, ஒலகடம், பருவாச்சி, தொப்பபாளையம், வேம்பத்தி, மாத்தூர், செம்புளிச்சாம்பாளையம் போன்ற கிராமங்களில், ஆயிரக்கணக்கான விவசாயிகள், மானாவாரி பூமியில் விவசாயம் செய்து வருகின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, கம்பு, ராகி, சோளம், எள், நிலக்கடலை என பருவ மழையை நம்பி, சாகுபடி செய்து பயனடைந்தனர். கடந்த, மூன்று ஆண்டுகளாக, பருவ மழை பொய்த்து, விவசாயிகளின் வாழ்க்கையும் கேள்விக்குறியாக்கிவிட்டது. சில விவசாயிகள், வீட்டுமனைகளுக்கு நிலத்தை விற்றும், சிலர் செங்கல் சூளைகளுக்கு, மண்ணை விற்றும், வாழ்க்கை நடத்துகின்றனர். மேலும், பலர் நிலத்தை தரிசாக விட்டுவிட்டு, பெருந்துறை, திருப்பூர், கோபி போன்ற இடங்களில்

உள்ள, தனியார் பனியன் கம்பெனிகளுக்கு சென்று, கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்துகின்றனர்.

இந்நிலையில், இந்த ஆண்டு, பருவ மழை பெய்யும் என்ற நம்பிக்கையில், மானாவாரி பூமியில், ஆடிப்பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்ய, நிலத்தை உழுது தயார் நிலையில் வைத்து, வானத்தை பார்த்து, விவசாயிகள் காத்து கொண்டிருகின்றனர். அந்தியூர் பகுதி விவசாயிகள் கூறியதாவது:

இப்பகுதியில் ஆறு, வாய்க்கால் நீருக்கு வழியில்லை. மழை பெய்தால் மட்டுமே விவசாயம் செய்ய முடியும். மழை பெய்தால், நிலத்தடி நீரும் உயரும். சமீப காலமாக மிகக்குறைந்த அளவு கூட, மழை பெய்யாததால், பெரும்பாலான கிணறு, போர்வெல்கள் தூர்ந்தும், குறைந்த அளவே நீர் வரும் நிலையிலும் உள்ளது. இதை நம்பி, முழுமையாக விவசாயம் செய்ய முடியாது. இந்தாண்டு, பரவலாக அனைத்து இடங்களிலும் மழை பெய்து வருகிறது. இதனால், இங்கும் பெய்யும் என்ற நம்பிக்கையில், உழவு செய்துள்ளோம். ஓரளவு மழை பெய்தால், கூட மகசூல் பார்த்துவிடுவோம், என்றனர்.

## பவானிசாகரில் 4 அடி உயர்வு

**சத்தியமங்கலம்**: சத்தியமங்கலம் அடுத்த பவானிசாகர் அணை, தென்னிந்தியாவில் மிகப்பெரிய மண் அணை. இந்த அணை மூலம், ஈரோடு, கரூர் மாவட்டத்தில், 2.60 லட்சம் ஏக்கர் பாசனம் பெறுகிறது. பல கிராமங்களுக்கு, குடிநீராதாரமாக விளங்குகிறது. இந்த அணையின் நீர்பிடிப்பு பகுதியான, நீலகிரி மலைப்பகுதியில், கடந்த, சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், கடந்த மூன்று நாளுக்கு முன், 44 அடியாக இருந்த அணையின் நீர் மட்டம், நேற்று முன்தினம், 48 அடியானது. நேற்று அணைக்கு, 6,900 கனஅடி நீர் வரத்தாகிறது. அணையில் இருந்து, பவானி ஆற்றில், 1,050 கனஅடியும், வாய்க்காலில், ஐந்து கனஅடியும் நீர் திறக்கப்பட்டுள்ளது. நேற்று ஒரே நாளில், நான்கு அடி உயர்ந்து, அணையின் நீர் மட்டம், 52 அடியானது.

## பூச்சியை கட்டுப்படுத்த "இனக்கவர்ச்சி பொறி' வந்தாச்சு! மாவட்ட தென்னை விவசாயிகள் "நிம்மதி'

**ராமநாதபுரம்** : தென்னை விவசாயத்தை அழிவு பாதைக்கு கொண்டு செல்வதில் முக்கிய பங்கு வகித்த, காண்டாமிருக வண்டு, சிவப்பு கூண்டு வண்டுகளை கட்டுப்படுத்த வேளாண் துறை சார்பில் "இனக்கவர்ச்சி பொறி' என்ற புதிய தொழில்நுட்பத்தை ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
மாவட்டத்தில் 9000 எக்டேரில் தென்னை சாகுபடி நடந்து வருகிறது. திருப்புல்லாணி, உச்சிப்புளி, முத்துப்பட்டிணம், பெருங்குளம், கீழக்கரை உள்ளிட்ட பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் பல ஏக்கர் பரப்பளவில், தென்னை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை பொய்ப்பால், தண்ணீர் இன்றி தென்னை விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. விளைச்சல் நன்றாக இருக்கும் பட்சத்தில் மரத்திற்கு 80 தேங்காய் கிடைத்தது. தற்போது, 40 தேங்காய் கிடைப்பதே அரிது. விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர். பூச்சி தாக்குதல் அதிகரிப்பு: காண்டாமிருக வண்டு தென்னையின் குருத்து பகுதியையும், சிவப்பு கூண் வண்டு, மரத்தின் நடுப்பகுதியையும் தாக்கி வருகிறது. சிவப்பு கூண் வண்டு தாக்குதலால் மரத்தின் உட்பகுதி ஓட்டை விழுந்து காணப்படும். பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த முடியாமல், மாவட்ட விவசாயிகள் திணறி வந்தனர்.

வேளாண், உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) ஷேக் அப்துல்லா கூறியதாவது: திருப்புல்லாணி, பெருங்குளம், உச்சிப்புளி போன்ற பகுதிகளில் "இனக்கவர்ச்சி பொறி' மற்றும் புதிய தொழில்நுட்ப முறையில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டது. இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. ஒரு ஏக்கருக்கு ஒரு இனக்கவர்ச்சி பொறி வைத்தால் போதுமானது. ஏக்கருக்கு 800 ரூபாய் மட்டுமே செலவாகும். பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தி, அதிக மகசூல் பெறலாம், என்றார்.

## தேயிலை தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக ரூ.300 கிடைக்குமா? வால்பாறை எஸ்டேட் நிர்வாகங்கள் வழங்க எதிர்பார்ப்பு

**வால்பாறை** : விலைவாசிக்கேற்றபடி தினக்கூலியாக 300 ரூபாய் வழங்க வேண்டும் என்று வால்பாறை தேயிலை தொழிலாளர்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

கோவை மாவட்டம் வால்பாறை மலைப்பகுதியில் உள்ள பல்வேறு எஸ்டேட் பகுதிகளில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கடுமையான வெயிலிலும், கொட்டும் மழையிலும், அட்டைப்பூச்சியின் கடியிலும், கொடிய வனவிலங்குகளின் அச்சுறுத்துதலிலும் பணி செய்கின்றனர். இவர்களுக்கு, தற்போது தினக்கூலியாக ரூ.211.75 வழங்கப்படுகிறது. ஏறிவரும் விலைவாசியில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் இந்த சம்பளம் போதுமானதாக இல்லை. இதனால், வறுமையை தாக்குப்பிடிக்க முடியாமல், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் எஸ்டேட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இதனிடையே, தொழிலாளர் பற்றாக்குறையை போக்க வெளிமாநில தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டு, தேயிலை பறிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து வால்பாறை தேயிலை தோட்ட தொழிலாளர்கள் கூறியதாவது: எஸ்டேட் பகுதியில் தேயிலை பறிக்கும் பணியில் ஈடுபடும் எங்களுக்கு, எந்த ஒரு பாதுகாப்பும் இல்லை. பகல் நேரத்திலும், இரவு நேரத்திலும் வனவிலங்குகள் எங்களை விடாமல் விரட்டி வருகிறது. எங்களுக்கு தற்போது எஸ்டேட் நிர்வாகம் வழங்கப்படும் சம்பளம் போதுமானதாக இல்லை.விலைவாசி உயர்வால், குறைந்த சம்பளத்தில் தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாமல் தவிக்கின்றனர். எனவே எஸ்டேட் பகுதிகளில் தொழிலாளர்கள் நிரந்தரமாக தங்கி பணிபுரிய, எஸ்டேட் நிர்வாகம் குறைந்தபட்சம் தினக்கூலியாக 300 ரூபாய் வழங்க வேண்டும்.இவ்வாறு தொழிலாளர்கள் கூறினர்.

'சம்பளம் குறைப்பால் விரக்தி' : வால்பாறை தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு, தமிழக அரசு அறிவித்துள்ள குறைந்தபட்சக்கூலியின் அடிப்படையாகக்கொண்டு நடந்த பேச்சு வார்த்தையில், தினக்கூலியாக தற்போது ரூ.211.75 வழங்கப்படுகிறது. இந்நிலையில், மத்திய அரசின் விலைவாசி புள்ளிப்படி தொழிலாளர்களுக்கு, கடந்த ஜூலை 1ம் தேதி முதல் ஏற்கனவே வழங்கப்பட்ட பஞ்சப்படியிலிருந்து ரூ.2.11 குறைக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட பஞ்சப்படி குறைக்கப்பட்டதால், தொழிலாளர்கள் விரக்தியடைந்துள்ளனர்.

## இலவச கால்நடை மருத்துவ முகாம்

**அவலூர்பேட்டை**: மேல்மலையனூர் ஒன்றியம் குந்தலம்பட்டு கிராமத்தில் கால்நடை துறை மற்றும் ஹேண்ட் இன் ஹேண்ட் தொண்டு நிறுவனம் இணைந்து இலவச கால்நடை மருத்துவ முகாம் நடத்தினர். ஊராட்சி தலைவர் ரமேஷ் தலைமை தாங்கினார். தொண்டு நிறுவன களப்பணியாளர் மேனகா முன்னிலை வகித்தார். டாக்டர் துரை முருகன், உதவியாளர் விஜயகுமார் ஆகியோர் நூற்றுக்கும் மேற்பட்ட ஆடுகளுக்கு குடற் புழு நீக்கம் செய்து, 320 மாடுகளுக்கு தடுப்பூசி போட்டனர்.

## சூரியஒளி மின் மோட்டார்களுக்கு தோட்டக்கலை துறை மானியம்

**விழுப்புரம்**: சூரிய ஒளி மின்சக்தியால் இயங்கும் மின் மோட்டார்களுக்கு தோட்டக்கலை துறை மூலம் மானியம் வழங்கப்படுகிறது. தோட்டக்கலை துணை இயக்குநர் ராசு விடுத்துள்ள அறிக்கை: தோட்டக்கலை துறை மூலம் மாவட்டத்தில் செயல்படும் திட்டங்களில் 80 சத மானியத்தில் சூரிய ஒளி மின்சக்தி மூலம் திறந்தவெளி கிணறுகளுக்கு மோட்டார் அமைக்கும் திட்டம் முக்கியமானது ஆகும். இந்த திட்டம் மாவட்டத்தில் 22 வட் டாரங்களில் தோட்டக்கலை பயிர் சாகுபடி விவசாயிகளுக்கு செயல்படுத் தப்படுகிறது. இதன் மூலம் 46 யூனிட் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வேளாண் பொறியியல் துறையோடு இணைந்து திறந்தவெளி கிணறு வைத்துள்ள தோட்டக்கலை விவசாயிகளுக்கு தொழில்நுட்ப

ரீதியாக வாய்ப்புள்ள இடங்களில் போடிநாயக்கனூர், ரிச் பைடோகேர் பிரைவேட் லிட்., சென்னை சாய் பாபுஜி லிட்., நிறுவனம் மூலம் சூரிய ஒளி மின்வசதி மோட்டார்கள் அமைக்கப்படுகிறது. பயன்பெற விரும்பும் விவசாயிகள் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண் அலுவலர்களை அணுகலாம். இந்த நிறுவனங்களில் ஏதேனும் ஒன்றிற்கு ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 512 ரூபாயிற்கு வங்கி வரைவு எடுத்து கொடுக்க வேண்டும். இந்த திட்டத்தில் 5 எச்பி ஏசி, சப்மெர்சிபல் பம்புசெட் மொத்த தொகை 5 லட்சத்து ஆயிரத்து 512 ரூபாயில் அரசு மானியம் 3 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் ஆகும். விரைவாக வங்கி வரைவு பங்கு தொகை செலுத்தும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இவ்வாறு துணை இயக்குநர் ராசு தெரிவித்துள்ளார்.

## ஆடுகள் வாங்க அதிகாரிகள் வந்ததால் விலை கிடுகிடு

**உளுந்துார்பேட்டை**: உளுந்துார்பேட்டை ஆட்டு வார சந்தைக்கு, விலையில்லா ஆடுகள் வாங்க பயனாளிகளுடன் அதிகாரிகள் குழு வந்ததால், விலை கிடு, கிடுவென உயர்த்தப்பட்டது.

உளுந்துார்பேட்டை தொகுதி பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் வழங்க ஆடுகள் தேர்வு செய்யும் பணி நடக்கிறது. உளுந்துார்பேட்டையில் நேற்று நடந்த ஆட்டு வாரச்சந்தைக்கு, ஆடுகளை தேர்வு செய்ய, பாதுார் கால்நடை உதவி மருத்துவர் வினோத் தலைமையில் மருத்துவ குழுவினர், ஊராட்சி தலைவர், பயனாளிகளுடன் வந்திருந்தனர். ஆடுகள் வாங்க பயனாளிகள் வந்ததை அறிந்த வியாபாரிகள், ஆட்டின் விலையை கனிசமாக உயர்த்தினர். ஒரு சிறிய ஆடு ரூ. 3 ஆயிரம் முதல் ரூ. 4 ஆயிரத்திற்கும் மேல் விற்றன. இதனால் சிறிய ஆட்டிற்கு கிராக்கி ஏற்பட்டதால் குறைந்த எண்ணிக்கையில் ஆடுகளை வாங்கினர். மற்ற பயனாளிகளுக்கு அருகில் நடக்கும் வார சந்தையில் வாங்க முடிவு செய்து கொண்டு திரும்பினர்.

## ஆடிப்பட்டத்தில் கடலை தயாராகும்; விவசாயிகள்

**சிங்கம்புணரி** : சிங்கம்புணரி வட்டார விவசாயிகள் ஆடிப்பட்டத்தில் கடலை சாகுபடி செய்ய தயாராகி வருகின்றனர்.

இப்பகுதி புஞ்சை நிலங்களில் மானாவாரி கடலை பயிர் அதிக அளவு செய்யப்படுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த மழை ஈரத்தை பயன்படுத்தி ஒடுவன்பட்டி, மேலப்பட்டி, பிரான்மலை, எம்.கோயில்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் உழவு செய்து தயார் நிலையில் வைத்துள்ளனர். கடந்தாண்டு போதிய மழையின்றி கடலை விளைச்சல் குறைந்ததால் பெரும்பாலான விவசாயிகளிடம் கடலை விதை இருப்பு இல்லை.வெளி மார்க்கெட், வேளாண் மையத்தில் கடலை விதையை விலைக்கு வாங்கிஅதை உடைத்து விதையாக மாற்றி, விதைக்க தயார் நிலையில் வைத்துள்ளனர். ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்ய மழையை ஆவலோடு எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

## சிப்பி காளான் பயிற்சி முகாம்

**நாமக்கல்**: "சிப்பி காளான் வளர்ப்பு குறித்த, ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு, நாமக்கல் கால்நடை மருத்துவமனையில் நடக்கிறது' என, வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல்-திருச்சி சாலையில், அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், சிப்பி காளான் வளர்ப்பு குறித்த முழு விபரங்களுடன் கூடிய இலவச பயிற்சி, வரும், 22ம் தேதி, காலை, 9 மணிக்கு நடக்கிறது. எனவே, ஆர்வம் உள்ளவர்கள் கூடுதல் தகவல்களுக்கு, 04286-266 244 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.
இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## விவசாய மாணவிகளின் வறட்சி நிவாரணி பயிற்சி

**உத்தமபாளையம்** : உத்தமபாளையம் ராயப்பன்பட்டியில் நெல்விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.வேளாண் அலுவலர் முருகசேன் வரவேற்றார். உயிர் உர உற்பத்தி மையத்தின் வேளாண் அலுவலர் பாண்டி உயிர் உரம் குறித்து பேசினார்.விவசாயிகள் தங்கள் அனுபவங்களை தெரிவித்தனர்.

குள்ளபுரம் வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவிகள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் வறட்சி நிவாரணி ஹைட்ரோஜெல் குறித்த செயல்முறை விளக்கம் அளித்தனர். இதை பயன்படுத்துவதன் மூலம் பயிர்களுக்கு வழங்கப்படும் சராசரி நீரின் அளவை குறைக்கலாம், என விளக்கினர். உதவி வேளாண் அலுவலர் பால்முத்து நன்றி கூறினார்.

தினமணி

**நாளை விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம்**

**திருவள்ளூர்**:

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜூலை 18) நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் வெளியிட்டுள்ள

செய்திக்குறிப்பு:

திருவள்ளுர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெறுகிறது.

கூட்டத்துக்கு ஆட்சியர் தலைமை வகிக்கிறார். அந்த நேரத்தில், இம்மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய்த்துறை, மின்வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, மீன்வளத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை உள்ளிட்ட அலுவலர்கள் பங்கேற்கின்றனர்.

எனவே இம்மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று பயன்பெற வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>கொடைக்கானலில் சாரல் மழை:விவசாயம் செய்வதற்கு விவசாயிகள் ஆர்வம்</u>**

**கொடைக்கானல்**:கொடைக்கானலில் அவ்வப்போது சாரல் மழை பெய்து வருவதால், விவசாயம் செய்வதற்கு விவசாயிகள் ஆர்வமடைந்துள்ளனர்.
கொடைக்கானலில் பொதுவாக ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பருவமழை பெய்வது வழக்கம். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக பருவநிலை மாற்றம் காரணமாக பருவமழை பொய்த்தது. இந்தாண்டும் ஜூன் மாதத்தில் ஒரு நாள் மட்டுமே மழை பெய்தது. அதனைத் தொடர்ந்து, அவ்வப்போது சாரல் மழை பெய்து வருகிறது.

இந்த சாரல் மழையில், உருளைக் கிழங்கு, கேரட், பீன்ஸ், காலிபிளவர் உள்ளிட்ட பயிர்களை நடுவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போது, அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, கோம்பை, புலியூர் ஆகியப் பகுதிகளில் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கரில் உருளைக்கிழங்கு நடுவதற்கு ஏற்கெனவே வாங்கி வைத்திருந்த உருளைக் கிழங்கு விதையை தரம் பிரித்து வருகின்றனர்.

இது குறித்து, மாட்டுப்பட்டியைச் சேர்ந்த விவசாயி பாண்டி கூறுகையில், ஜூன் மாதம் பருவமழை பெய்யும் என எதிர்பார்த்து, உருளைக்கிழங்கு நடுவதற்கு மேட்டுப்பாளையம் பகுதியிலிருந்து 500 சிப்பம் விதைக் கிழங்கு வாங்கி வைத்திருந்தோம்.

ஆனால், மழை பெய்யாததால், பல நாள்களாகிய விதைக் கிழங்கு சேதமடைந்துள்ளது. கடந்த சில தினங்களாக சாரல் மழை பெய்து வருவதால், உருளைக் கிழங்கு நடவு செய்ய முடிவு செய்யப்பட்டு, விதைக் கிழங்கை சரிபார்த்து வருகிறோம். கொடைக்கானல் பகுதிகளில் தரமான விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் மானிய விலையில் கொடுக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தால், விவசாயத்தை மேம்படுத்த முடியும் என்றார்.

## நிலக்கோட்டை பகுதியில் மல்லிகைப் பூ விலை சரிவு

**வத்தலகுண்டு**:

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பூ மார்கெட்டுக்கு வரும் மல்லிகைப் பூ உள்ளிட்ட அனைத்து பூக்களின் விலை வீழ்ச்சியால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நிலக்கோட்டையைச் சுற்றியுள்ள கிராமங்களில் அதிக அளவு பூ விவசாயம் நடைபெறுகிறது. எனவே, நிலக்கோட்டையில் பெரிய அளவில் பூ மார்கெட் செயல்பட்டு வருகிறது. இந்த மார்கெட்டுக்கு தமிழகம், கேரளம் மற்றும் வடமாநிலத்தைச் சேர்ந்த வியாபாரிகள் வந்து அதிக அளவில் பூக்களை கொள்முதல் செய்கின்றனர். தற்போது சீசன் இல்லாததால், வியாபாரிகளின் வருகை குறைந்துள்ளது. இதனால், மார்கெட்டுக்கு விவசாயிகள் கொண்டு வரும் பூக்களுக்கும் விலை கிடைக்காமல் வேதனை அடைந்துள்ளனர்.

கடந்த மாதம் மல்லிகைப் பூ ஒரு கிலோ ரூ. 400-க்கு விற்பனையானது. தற்போது, ஒரு கிலோ ரூ. 150-க்கும், முல்லை, கனகாம்பரம், பிச்சி, சம்மங்கி, அரளி, ரோஜா ஆகியவற்றின் விலை மிகவும் குறைந்துள்ளது. இதனால், நிலக்கோட்டை பூ மார்கெட்டுக்கு பூக்களை கொண்டு வரும் விவசாயிகள், விலை வீழ்ச்சியால் கவலை அடைந்துள்ளனர். மேலும், பூக்களை பறிப்பதற்கு கூலி கொடுப்பதற்குக் கூட விலை போகவில்லை என வருத்தம் தெரிவித்தனர்.

## கண்மாய் வரத்து கால்வாய்களை தூர்வாரக் கோரிக்கை

**திருவாடானை**:

திருவடானை தாலுகாவில் கண்மாய் வரத்து கால்வாய்கள் பல ஆண்டுகளாக தூர்வாரப்படாமல் தூர்ந்து போகும் நிலையில் இருப்பதால்,உடனடியாக தூர் வார நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருவாடானை தாலுகா முழுவதும் சுமார் 1லட்சத்து 50ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெல் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இங்கு பொதுப்பணித்துறை கண்மாய்கள் 63, யூனியன் கண்மாய்கள் 141, ஜமீன் கண்மாய்கள் 89, அதனைத் தொடர்ந்து சங்கிலித் தொடர்போல் ஒன்றன் பின் ஒன்றாக சுமார் 300 கண்மாய்கள், குளங்கள், குட்டைகள் வரத்து கால்வாய்கள் என

உள்ளன.

பெரும்பாலானவை சுமார் 30 வருடங்களுக்கு மேல் தூர்வாரப்படாமல் தூர்ந்து போய் உள்ளன. மேலும் கண்மாய்கள், வரத்துகால்வாய்களில் கருவேல மரங்கள், கொடிப்பூவரசு செடிகள் என புதர் மண்டி இருக்கும் இடம் தெரியாமல் உள்ளன.

மழைக்காலங்களில் கிடைக்கும் மழை நீரை தேக்கி வைக்க முடியாததால், அறுவடை நேரத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு விளைச்சல் பெரும் பாதிப்படைகிறது.

இதனால் விவசாயிகள் இழப்புக்கு ஆளாக வேண்டிய நிலை உள்ளது.

எனவே மாவட்ட நிர்வாகம் தக்க நடவடிக்கை எடுத்து கண்மாய்கள், வரத்துகால்வாய்களை தூர்வார நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து ஆண்டிவயல் விவசாயி நாகநாதன் கூறியது:

கடந்த 3 ஆண்டுகளாக போதுமான மழை இல்லை. பருவ மழை துவங்கும் முன் கண்மாய்கள், வரத்துகால்வாய்கள் தூர்வாரப்பட்டால் பருவ மழை நேரத்தில் மழை நீரை தேக்கி விவசாயம் செய்ய முடியும் என்றார்.

## <u>அப்பர் நீராறில் 212 மி.மீ. மழை</u>

**கோவை**:
அப்பர் நீராறு அணைப் பகுதியில் புதன்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 212 மி.மீ. மழை பெய்துள்ளது.

பிற இடங்களி0ல் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்): சோலையாறு 95, பரம்பிக்குளம் 58, ஆழியாறு 4.4, திருமூர்த்தி 3, தூணக்கடவு 19, பெருவாரிப்பள்ளம் 23, லோயர் நீராறு 81, அப்பர் ஆழியாறு 2, காடம்பாறை 10, சர்க்கார்பதி 8, வேட்டைக்காரன்புதூர் 15.6, மாக்கினாம்பட்டி 9, மணக்கடவு 10.5, நெகமம் 13, நல்லாறு 8, நவமலை 3.2.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

**கோவை**:

சின்னியம்பாளையத்தில் மழைநீர் சேகரிப்பு குறித்து பள்ளி மாணவர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சின்னியம்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் என்.தேவராஜன் தலைமையில் நடைபெற்ற பேரணியை சூலூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் மாதப்பூர் பாலு துவக்கி வைத்தார்.

சின்னியம்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இருந்து புறப்பட்ட பேரணியில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பதாகைகளை பள்ளி மாணவர்கள் ஏந்திச் சென்றனர். இதில் சின்னியம்பாளையம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கே.கோபால், வார்டு உறுப்பினர்கள் ராமராஜ், கிருஷ்ணவேணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நீடித்த வேளாண்மை தான் உணவு பாதுகாப்புக்கு வழிவகுக்கும்

**கோவை**:

நீடித்த வேளாண்மைதான் உணவுப் பாதுகாப்புக்கு வழிவகுக்கும் என எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் எம்.எஸ்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புதன்கிழமை நடந்த மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் எம்.எஸ்.சுவாமிநாதன் பேசியது:

வேளாண்மைத் துறையில் மரபணு மாற்ற தொழில்நுட்பம் பெரிய அளவில் உற்பத்தியை அதிகரித்துள்ளது. கடந்த 1947 இல் உருளைக் கிழங்கு உற்பத்தி 5 மில்லியன் டன்னாக இருந்தது. இது 2013 இல் 45 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது.

அனைவருக்கும் உணவு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பசுமை புரட்சியானது அறிவியல்,

அரசு மற்றும் விவசாயிகளின் ஒட்டுமொத்த உழைப்பில் உருவாகும். பாசுமதி அரசி 1,121 மற்றும் 1,509 ரகம் மூலம் ரூ.30,000 கோடி நிகர லாபம் எட்டப்பட்டுள்ளது.

நீடித்த வேளாண்மைதான் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும். வருங்கால சவால்களான முற்றிலுமான வறுமை ஒழிப்பிற்கு உயிரியல் முறை பாதுகாப்பு, பாரம்பரிய முறை ஆராய்ச்சி, மூலிகை பாதுகாப்பு காரணமாக இருக்கும் என்றார்.

இதில் மூலிகை சூப் வழங்கும் இயந்திரம் தொடங்கி வைக்கப்பட்டது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு.ராமசாமி, முதன்மையர் எஸ்.மகிமைராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>உர மானியத்தை விவசாயிகளுக்கே அரசு வழங்க வேண்டும்</u>**

**ஈரோடு**:

உர மானியத்தை விவசாயிகளுக்கே அரசு நேரடியாக வழங்க வேண்டும் என்று, பாமக தலைவர் ஜி.கே.மணி தெரிவித்தார்.

இதுகுறித்து, ஈரோட்டில் புதன்கிழமை நடைபெற்ற ஒருங்கிணைந்த மாவட்டப் பொதுக்குழு கூட்டத்துக்குப் பின், செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி:

காவிரிப் பிரச்னை, இலங்கைத் தமிழர் பிரச்னையில் முந்தைய காங்கிரஸ் அரசின் கொள்கையையே பாஜக அரசும் கடைப்பிடிக்கிறது. இதை மாற்றிக்கொள்ள வேண்டும். இலங்கை ராணுவத்துக்கு இந்தியாவின் எந்த இடத்திலும் பயிற்சி அளிக்கக் கூடாது.

காவிரிப் பிரச்னைக்குத் தீர்வு காண மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரி மேலாண்மை வாரியத்தை தொடங்க வேண்டும்.

நடப்பு ஆண்டில் இந்தியா, மலேசியா, இலங்கை, சிங்கப்பூர் உள்ளிட்ட ஆசிய நாடுகளில் மழை அளவு குறையும் என்றும், இந்தியாவில் மட்டும் சராசரியாக 45 சதவீத மழை அளவு குறையும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. இதனால், உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகும். உணவு உற்பத்தியைப் பெருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத் தொகையில் ரூ.572 கோடி வழங்கப்படும்

என தமிழக அரசு அறிவித்துள்ளது. நிலுவைத் தொகை முழுவதும் வழங்க வேண்டும்.

கரும்பு டன்னுக்கு ரூ.3,500 ஆக விலை நிர்ணயம் செய்ய வேண்டும். ஏற்கெனவே கரும்புக்கு தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்ட ரூ.2,650-க்குப் பதிலாக ரூ.2,250 மட்டுமே ஆலைகள் வழங்கி வருகின்றன. அரசு நிர்ணயித்த விலையை வழங்காத கரும்பு ஆலைகளை அரசுடைமையாக்க வேண்டும்.

விவசாயிகளுக்குத் தேவையான உரங்களைத் தயாரிக்கும் ஆலைகளுக்கு ஆண்டுக்கு ரூ.2 லட்சம் கோடி மானியம் வழங்கப்படுகிறது. இருப்பினும் உர விலையை தனியார் நிறுவனங்கள் தொடர்ந்து உயர்த்தி வருகின்றன. உரத்துக்கான மானியத்தை விவசாயிகளுக்கே நேரடியாக வழங்க வேண்டும் என்றார்.

பேட்டியின்போது, மாநில துணைப் பொதுச் செயலாளர் கா.சு.மகேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் பொ.வை.ஆறுமுகம் (ஈரோடு மாநகர்), என்.ஆர்.வடிவேல் (கிழக்கு), பி.சி.செங்கோட்டையன் (ஈரோடு வடக்கு), ஏ.கே.மணிமோகன் (மேற்கு), மாநில துணைத் தலைவர் செ.இல.பரமசிவம் ஆகியோர் உடன் இருந்தனர்.

## <u>அப்பர் பவானியில் 100 மி.மீ. மழை பதிவு</u>

**உதகை**:

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 4 நாள்களாக தொடர்ந்து பெய்துவந்த மழை புதன்கிழமை சற்றே ஓய்ந்திருந்தது. பெரும்பாலான பகுதிகளில் மழையின்றி இயல்பான கால நிலையே காணப்பட்டது.

மாவட்டத்தில் புதன்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 350 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. இதில் அதிகபட்சமாக அப்பர்பவானியில் 100 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் பதிவான மழை விவரம் ( மில்லி மீட்டரில்): தேவாலா-67, நடுவட்டம்-62.6, கூடலூர்-32.6, எமரால்டு-27.5, கிளன்மார்கன்-23, அவலாஞ்சி-12, உதகை-10.3, கேத்தி-6.2, குந்தா-5, கோத்தகிரி-2.5, குன்னூர்-1.4 மி.மீ.

**<u>நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>**

**வேலூர்**:

வேலூர் ஆட்சியர் அலுவலகத்தில் மாதம்தோறும் வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது.

காலை 10.30 மணியளவில் தொடங்கும் இக்கூட்டத்துக்கு ஆட்சியர் இரா.நந்தகோபால் தலைமை தாங்குகிறார்.

இதில் அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். விவசாயிகள் தங்கள் குறைகளை மனுக்கள் மூலமாகவோ, நேரடியாகவோ ஆட்சியரிடம் தெரிவிக்கலாம். கடந்த மாதத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கை குறித்து அலுவலர்கள் தெரிவிப்பர்.

இத்தகவலை ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**<u>நீர்வடிப் பகுதி விவசாயிகளுக்கு பயிற்சி</u>**

**செய்யாறு**:

செய்யாறு ஒன்றியத்துக்குள்பட்ட நீர்வடிப் பகுதி விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி செவ்வாய்க்கிழமை அளிக்கப்பட்டது.

செய்யாறு வேளாண்மை அலுவலகத்தில் நடைபெற்ற பயிற்சிக்கு உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தலைமை வகித்து தொடங்கி வைத்தார்.

திருத்தணி விசா தொண்டு நிறுவன திட்ட இயக்குநர் ஜெ.இ.கென்னடி, வளர்ச்சி அணி உறுப்பினர் பரமேஸ்வரி, ரமேஷ், நிறுவன பயிற்றுநர் செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு ஊராட்சிகளில் நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், தடுப்பணைக் கட்டுதல், குளம் தூர் வாருதல், பண்ணைக் குட்டைகள், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்து அதன் மூலம் சாகுபடி நிலங்களை விரிவாக்கம் செய்தல், உற்பத்தியைப் பெருக்குதல் தொடர்பான தொழில்நுட்ப முறைகளை தெரிவித்து பயிற்சி அளித்தனர்.

இப்பயிற்சியில் செய்யாறு ஒன்றியத்துக்குள்பட்ட எரையூர், குன்னத்தூர், தென்பூண்டிப்பட்டு, ராமகிருஷ்ணபுரம், காழியூர் ஆகிய கிராமங்களில் இருந்து

சுமார் 110 பேர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

**ஊத்தங்கரை அருகே அதிக மகசூல் தரும் காய் வகைகள்**

**ஊத்தங்கரை**:

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அருகேயுள்ள கல்லாவி, வேடப்பட்டியில் அதிக மகசூல் தரும் காய் வகைகளால் விவசாயி மகிழ்ச்சியடைந்துள்ளார்.

வேடப்பட்டியில் சுமார்

100-க்கும் மேற்ப்பட்ட விவசாய குடும்பத்தினர் வசிக்கின்றனர். இந்தப் பகுதியில் தானிய வகைகள், கரும்பு, மஞ்சள், தக்காளி, நெல் போன்ற பயிர் வகைகளை விவசாயிகள் தொடர்ந்து சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த வெள்ளைய கவுண்டர் மகன் சரவணன் (39). விவசாயி. இவருக்குச் சொந்தமான 2.5 ஏக்கரில் கடந்த 10 ஆண்டுகளாக வழக்கமான பயிர் வகைகளைச் சாகுபடி செய்தார். கடந்த பிப்ரவரி மாதம் இந்தப் பகுதியில் புதிதாக புடலங்காய், பாகற்காய் ஆகிய இரண்டையும் சுமார் ஓர் ஏக்கரில் சாகுபடி செய்து பந்தல் அமைத்து பராமரித்தார்.

பயிரிட்டு இரண்டரை மாதத்தில் கொடிகளில் காய்கள் காய்க்கத் தொடங்கின. கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ச்சியாக தினமும் 100 கிலோ முதல் 150 கிலோ வரை காய்களை அறுவடை செய்வதாகவும், புடலங்காய் ஒரு கிலோ ரூ.15-ம், பாகற்காய் கிலோ ரூ.30 வரை விற்பனை செய்வதாக அவர் தெரிவித்தார். ஒரு பாகற்காய் அரை கிலோ வரையும் புடலங்காய் ஒரு காய் 1.25 கிலோ வரையும் எடையுள்ளது. காய்கறிப் பயிரைச் சாகுபடி செய்ததில் நல்ல லாபம் கிடைப்பதாக விவசாயி சரவணன் மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினார். இந்தப் பகுதியில் அன்மையில் மிதமான மழை பெய்து விவசாயத்துக்கு போதுமான நீர் ஆதாரம் கிடைத்துள்ளதாகவும். இது போன்ற பணப் பயிர் வகைகளை பயிர் செய்து விவசாயிகள் பயனடைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

<u>**கெண்டை மீன்களின் மரபணு மாற்று ஆராய்ச்சிக்கு ஒப்பந்தம்**</u>

**தஞ்சாவூர்:**

காவிரி டெல்டா பகுதியில் வளர்க்கப்படும் கெண்டை மீன்களின் மரபணு மாற்று ஆராய்ச்சி செய்வதற்காக, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் தனியார் மீன் பண்ணையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

திருவாரூர் மாவட்டம் வடுவூரில் புகழேந்தி நடத்திவரும் மீன் பண்ணையுடன் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமும் அண்மையில் கையெழுத்தானது.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன், மீன்வளக்கல்லூரி முதல்வர் கோ. சுகுமார், மீன்வள தொழில்நுட்ப நிலைய இயக்குநர்

முக. நாகூர் மீரான், பேராசியர்கள் க. காரல் மார்க்ஸ், பி.சிதம்பரம் ஆகியோர் பங்கேற்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, மீன்வளப் பல்கலைக்கழகம் கெண்டை மீன்களின்

மரபணு மாற்று ஆராய்ச்சி செய்வதற்கும், மீன்வளம் பயிலும் மாணவர்கள் வடுவூர் மீன் பண்ணையில் கள ஆராய்ச்சி செய்வதற்கும் வழி ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் மாணவர்களின் களப்பயிற்சிக்காக, திருவாரூர் மாவட்டம் வடுவூர் தனியார் மீன் பண்ணையுடன்தான் முதன்முதலாக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதன்மூலம் மீன்வளர்ப்பு விவசாயிகளின் தொழில் முன்னேற்றத்திற்கும், மீன்வளப் பட்டதாரிகள் தொழில்திறனை மேம்படுத்தவும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

<u>**தக்காளியிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பு**</u>

**நீடாமங்கலம்**:

நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் தக்காளியிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள்களை தயாரிப்பதற்கான செய்முறை விளக்கப் பயிற்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க. சோழன் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தக்காளி சூப், கெச்சப், சாப், தக்காளி ஊறுகாய் போன்ற பல்வேறு மதிப்பூட்டப்பட்ட பொருள்களை தயாரிப்பது குறித்து செய்முறை விளக்கத்தை ரேகா செய்து காட்டினார். மேலும் இவற்றை நெடுநாள் சேமித்து வைப்பதற்கான வழிகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. பயிற்சியில் திருச்சி வேளாண் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவிகளும், விவசாயிகளும் பங்கேற்றனர்.

**<u>கறவை மாடுகள் வாங்குவதற்கு 46 உறுப்பினர்களுக்கு நிதியுதவி</u>**

**பெரம்பலூர்:**

பெரம்பலூர் பால் உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த 46 உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கான நிதியுதவியை (வரைவு காசோலையை) திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது வழங்கினார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், பெரம்பலூர் பால் உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த 46 உறுப்பினர்களுக்கு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தின் மூலம் மாட்டு பண்ணை அமைப்பதற்கும், மாடுகளை ஆரோக்கியமாக வளர்ப்பதற்கான பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சி முடித்த அனைவருக்கும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பெரம்பலூர் கிளை மூலம் மாடுகள் வாங்குவதற்காக தலா ரூ. 50 ஆயிரம் வீதம் 46 நபர்களுக்கு ரூ. 23 லட்சத்தை மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது வழங்கினார். பயிற்சி மையத்தில், இதுவரை 124 நபர்கள் பயிற்சி பெற்று 112 நபர்கள் வங்கி மூலமாக ரூ. 56 லட்சம் கடனுதவி பெற்றுள்ளனர். நிகழ்ச்சியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மேலாளர் ஆதிமூலம், கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குநர் பார்த்தசாரதி, பால்வள துணைப் பதிவாளர் பாலசுந்தரம், பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் செல்வராஜன், செயலர் பாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**<u>சொட்டுநீர்ப் பாசனத்தை பயன்படுத்த விவசாயிகள் முன்வர வேண்டும்</u>**

**தூத்துக்குடி:**

தூத்துக்குடி மாவட்டத்தில் சொட்டுநீர்ப் பாசனத்தைப் பயன்படுத்த விவசாயிகள் முன்வர வேண்டும் என ஆட்சியர் ம.ரவிக்குமார் வலியுறுத்தினார்.

தூத்துக்குடி மாவட்ட திட்டக்குழுக் கூட்டம் திட்டக்குழுத் தலைவரும், மாவட்ட

ஊராட்சித் தலைவருமான மணத்தி ஆர். ரவிக்குமார் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில், ஆட்சியர் ம. ரவிக்குமார் கலந்து கொண்டு அனைத்துத் துறைகள் சார்பில் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும், திட்டக்குழு உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

கூட்டத்தில் ஆட்சியர் ம. ரவிக்குமார் பேசியதாவது: தூத்துக்குடி மாவட்டத்தில் மின்வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளை அதிகாரிகள் விரைவுபடுத்த வேண்டும். கிராமப் பகுதிகளில் முன்னுரிமை அளித்து மின்கம்பங்களை நட வேண்டும். தாழ்வாகச் செல்லும் மின்வயர்களை மாற்ற அதிகாரிகள் முன்வர வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளார்களா என்பது குறித்து திடீர் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், மாவட்டத்தில் பிரசவத்தின்போது தாய்-சேய் இறப்பு விகிதம் குறைந்து வருகிறது. இதனை மேலும் குறைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தால் அந்த குழந்தைகளின் பெயரில் வங்கியில் முன்வைப்புத் தொகை செலுத்தும் திட்டத்தின் பயனாளிகளின் வருமான உச்சரவம்பை ரூ. 24 ஆயிரத்தில் இருந்து அதிகரிக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது தொடர்பாக அரசுக்குப் பரிந்துரை அனுப்பப்படும்.

வேளாண்மைத் துறையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக வறட்சி நிலவி வந்தபோதிலும் நெல் சாகுபடி ஓரளவு பரவாயில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், நூறு சதவீதம் மானியம் வழங்கப்பட்டும் சொட்டுநீர் பாசனத் திட்டத்தின் மீது விவசாயிகள் அதிக ஆர்வம் கொள்ளாதவர்களாக உள்ளனர்.

இதுவரை 54 சதவீத அளவுக்கு மட்டுமே இலக்கு அடையப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் சொட்டுநீர் பாசனத் திட்டத்தில் ஆர்வம் காட்ட வேண்டும். இதுதொடர்பாக வேளாண்மைத் துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு விவரங்களை தெரிவிக்க வேண்டும் என்றார்.

கூட்டத்தில், திட்டக்குழு உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**பில்லூர் அணையின் நீர்மட்டம் உயர்வு: பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு**



**நீலகிரி**, மாவட்டம் பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. இதனால் பில்லூர் நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை காரணமாக அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் பில்லூர் அணையின் நீர்மட்டம் 92½ அடியாக உயர்ந்தது. இதனால் பவானி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டதை தொடர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. இதை தொடர்ந்து பவானி ஆற்றின் கரையோர பகுதிகளில் வசிக்கும் மேட்டுப்பாளையம், நெல்லித்துறை, சிறுமுகை, ஆலாங்கொம்பு பகுதி பொதுமக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

**பெருந்துறை வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.1¼ கோடிக்கு கொப்பரை தேங்காய் ஏலம் சத்தியில் ரூ.70 லட்சத்துக்கு பருத்தி விற்பனையானது**



**ஈரோடு**,

பெருந்துறை வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.1¼ கோடிக்கு கொப்பரை தேங்காய் ஏலம் போனது. சத்தியில் ரூ.70 லட்சத்துக்கு பருத்தி விற்பனையானது.

கொப்பரை தேங்காய்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் சிறப்பு ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு பெருந்துறை மற்றும் சுற்றுப்புற பகுதிகளைச் சேர்ந்த உற்பத்தியாளர் கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர்.

மொத்தம் 2 ஆயிரத்து 677 மூட்டைகளில் ஒரு லட்சத்து 31 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்றுக்கு 98 ரூபாய் 25 காசு முதல் 103 ரூபாய் 10 காசு வரையும், 2–ம் தரம் கொப்பரை தேங்காய் 75 ரூபாய் 15 காசு முதல் 97 ரூபாய் 75 காசு வரையும் ஏலம் போனது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தை விட கொப்பரை தேங்காய் கிலோவுக்கு 2 ரூபாய் கூடுதலாக விற்கப்பட்டது.

சத்தியில் பருத்தி ஏலம்

இதேபோல் சத்தி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் பருத்தி மற்றும் வாழைப்பழம் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு சிவியார்பாளையம், கொமாரபாளையம், அரசூர், அரியப்பம்பாளையம், ஏழூர், வடவள்ளி, பெரியகுளம், எரங்காட்டூர் உள்பட 35–க்கும் மேற்பட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் விவசாய விளைபொருட்களை கொண்டு வந்து இருந்தனர்.

பிரம்மா, ஜாக்பாட், ஆர்.சி.எச். போன்ற பருத்தி ரகங்களை விவசாயிகள் கொண்டு வந்து இருந்தனர். பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 900 முதல் 5 ஆயிரத்து 200 வரை விற்கப்பட்டது. மொத்தம் பருத்தி ரூ.70 லட்சத்துக்கு ஏலம் போனது.

வாழைப்பழம்

3 ஆயிரம் தார் வாழைப்பழங்கள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் கதலி ஒரு கிலோ 45 ரூபாய்க்கும், நேந்திரம் ரூ.25–க்கும் ஏலம் போனது. செவ்வாழைபழம்

ஒரு தார் 500 ரூபாய்க்கும், தேன்வாழை 350 ரூபாய்க்கும், ரஸ்தாளி 400 ரூபாய்க்கும், பூவன் 300 ரூபாய்க்கும் விற்பனையானது.

மொத்தம் வாழைப்பழங்கள் ரூ.3 லட்சத்துக்கு ஏலம் போனது. விளைபொருட்களை கோவை, திருப்பூர், அவினாசி, புஞ்சைபுளியம்பட்டி, சத்தியமங்கலம் ஆகிய பகுதிகளில் இருந்து வந்து இருந்த வியாபாரிகள் போட்டிபோட்டு ஏலம் எடுத்துச் சென்றனர்.

## தீவனப்பயிர் வளர்க்க விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்




**சிவகங்கை,**

அரசின் மானிய உதவியுடன் கால்நடை தீவனப்பயிர் வளர்க்க விவசாயிகள் விண்ணப்பிக்காலம் என்று மாவட்ட கலெக்டர் ராஜாராமன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து மாவட்ட கலெக்டர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கால்நடை தீவனப்பயிர்

கால்நடைகளுக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் மிகவும் முக்கியமானதாகும். பால் உற்பத்தியை பெருக்குவதற்கு தேவையான அளவு பசுந்தீவனம் கொடுப்பது மிகவும் அவசியம். தற்போது பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடந்த 3ஆண்டுகளாக தமிழக அரசு மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தினை செயல்படுத்துகிறது. அதன்படி இந்த ஆண்டும் அரசு மானியத்துடன் கூடிய தீவன பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும் 100 சதவீத மானியத்தில் அதிக மகசூல் தரக்கூடிய கம்பு, நேப்பியர் தீவனப்பயிர் சாகுபடி செய்ய ரூ.2 ஆயிரம் மானிய உதவியும் வழங்கப்படுகிறது.

நீர் பாசன கருவிகள்

மானாவாரியில் தீவன சோளம் மற்றும் தீவன தட்டைப்பயிறு சாகுபடி செய்திட ரூ.550 மானியம் வழங்கப்படுகிறது. செழிப்பு நீர் பாசன கருவிகள் நிறுவுவதற்கு ரூ.18 ஆயிரத்து 750 மானியமாக வழங்கப்படுகிறது. அகத்தி மர வகையினை சாகுடி செய்திட 100 சதவீத மானியத்துடன் விதைகள் வழங்கப்படுகிறது. இதுபோல் விவசாயிகள் அசோலா திடல் அமைத்திட ரூ.1,600 மானியம் வழங்கப்படுகிறது. இந்த திட்டங்களில் பயன்பெற விரும்பும் கால்நடை வளர்ப்பில் ஈடுப்பட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி கால்நடை உதவி மருத்துவரிடம் விண்ணப்பித்து பயன் பெறலாம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**100 சதவீதம் மானியம் கொடுத்தும் சொட்டு நீர்ப்பாசனத்தில் ஏன் இலக்கை அடையவில்லை? கலெக்டர் ம.ரவிகுமார் பேச்சு**



**தூத்துக்குடி**

தூத்துக்குடி மாவட்டத்தில் 100 சதவீதம் மானியம் கொடுத்தும் சொட்டு நீர்ப்பாசனத்தில் ஏன் இலக்கை அடையவில்லை என்று கலெக்டர் ம.ரவிகுமார் கேள்வி எழுப்பினார்.

திட்டக்குழு கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட திட்டக்குழு கூட்டம் நேற்று காலை கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்துக்கு திட்டக்குழு தலைவர் மணத்தி ஆர்.ரவிகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட கலெக்டரும், திட்டக்குழு துணைத்தலைவருமான ம.ரவிகுமார் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு

வரும் திட்டங்கள் குறித்து அதிகாரிகள் விளக்கி கூறினர். அப்போது அவர் பேசியதாவது:–

தூத்துக்குடி மாவட்டத்தில் தொழுநோயால் 9 பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர். பல் பரிசோதனை சிறப்பு முகாம்கள் தொடங்கப்பட்டு உள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2012–13–ம் ஆண்டில் பிரசவித்த ஒரு லட்சம் தாய்மார்களில் 134 பேர் இறந்தனர். 1000 குழந்தைகளில் 17 குழந்தைகள் இறந்து வந்தனர். 2013–14–ம் ஆண்டில் தாய்மார்கள் இறப்பு 90 ஆகவும், சிசுக்கள் இறப்பு 11 ஆகவும் குறைக்கப்பட்டு உள்ளது. மேலும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு இறப்பை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வேளாண்மைத்துறையில் தேசிய சிறப்பு வேளாண்மை இயக்கம் என்னும் புதிய திட்டத்தை அரசு செயல்படுத்த உள்ளது. இந்த திட்டத்தில் மாவட்ட அளவில் ஒரு குழு அமைக்கப்பட்டு 17 துறைகளை இணைத்து திட்டம் செயல்படுத்தப்படும். 500 எக்டர் பரப்பில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான அரசாணை இன்னும் வரவில்லை. தூத்துக்குடி மாவட்டம் கடந்த 2013–14–ம் ஆண்டு உற்பத்தியில் இலக்கை அடையமுடியவில்லை.

நாம் 3 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்து இருக்க வேண்டும். ஆனால் 54 சதவீதம் மழை குறைவாக பெய்ததால் 1.9 லட்சம் டன் மட்டுமே உற்பத்தி செய்ய முடிந்தது. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் 110 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டு மாநிலத்தில் முதல் இடத்தை பிடித்து உள்ளது. இதற்கான விருதை 2–வது முறையாக தமிழ்நாடு பெற உள்ளது.

இவ்வாறு கலெக்டர் ம.ரவிகுமார் கூறினார்.

தொழிற்சாலைகள்

கூட்டத்தில் மாவட்ட கவுன்சிலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பேசும் போது, தூத்துக்குடியில் அமைக்கப்பட்டு உள்ள புதிய அனல்மின்நிலையம் விரைந்து இயக்க வேண்டும். புதூர் பகுதியில் மின்சார ஒயர்கள் தாழ்வாக செல்கின்றன. இதனை சரி செய்ய வேண்டும். தூத்துக்குடி யூனியன் உள்ளிட்ட

பகுதிகளில் உள்ளாட்சிகளின் அனுமதி பெறாமல் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அந்த தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

<u>கலெக்டர் ம.ரவிகுமார்</u>

கலெக்டர் ம.ரவிகுமார் பதில் அளித்து பேசும்போது, தூத்துக்குடி மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது. இங்கு மின்சாரத்தை மத்திய தொகுப்புக்கு கொண்டு செல்லும் அளவுக்கு மின்கோபுரங்கள் அமைக்கப்படுகிறது. தூத்துக்குடி தொழில் நகரமாக மாறி வருகிறது. ஆகையால் முக்கியத்துவம் கொடுத்து மின்கம்பங்களை பெற்று நடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தூத்துக்குடியில் உள்ள ஒரு நிறுவனத்தில் வாயு கசிவு காரணமாக 54 பேர் பாதிக்கப்பட்டனர். இதில் 4 பேர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள். இதனால் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைக்கு நோட்டீசு கொடுக்கப்பட்டு உள்ளது. அனைத்து தொழிலாளர்களுக்கும் டோக்கன் கொடுக்க வேண்டும் என்றும், குழந்தைகள் ஹெல்ப்லைன் அமைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. மாவட்டத்தில் அனுமதி பெறாமல் இயங்கும் தொழிற்சாலைகள் குறித்து விவரங்களை கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தூத்துக்குடி மாவட்டத்துக்கு வடமாநில தொழிலாளர்கள் வருவதால், உள்ளூர் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு குறைகிறது. வடமாநில தொழிலாளர்களும் முழுமையாக விசாரணை நடத்தி 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள்.

<u>அதிக குழந்தை பிறப்பு</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் கடற்கரை கிராமங்களில் குழந்தை பிறப்பு அதிகமாக உள்ளது. அதனை குறைக்க திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கழுகுமலை, கோவில்பட்டி போன்ற பகுதிகளில் தாய்மார்கள் ரத்த சோகையால் பாதிக்கப்படுகின்றனர். இதனால் குழந்தை பிறப்பு பாதிக்கப்படுகிறது. இந்த 2 பிரச்சினையிலும் தூத்துக்குடி மாவட்டம் பின்தங்கி உள்ளது. இதனை சரிசெய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம். மாவட்ட பஞ்சாயத்து நிதியில் இருந்து துறைகளுக்கு நிதி ஒதுக்கித்தர வேண்டும்.

மேலும் தூத்துக்குடி மாவட்டத்தில் 100 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர்ப்பாசனம் அமைத்துக் கொடுக்கப்படுகிறது. இதில் 50 சதவீதம் கூட இலக்கை அடையவில்லை. இதற்கு காரணம் என்ன?. இது தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதிக அளவில் சொட்டுநீர்ப்பாசனம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஜா.பெல்லா, அனைத்து துறை அதிகாரிகள், மாவட்ட கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். திட்டக்குழு செயலாளர் கஸ்தூரி நன்றி கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**<u>எள் விலை முன்னறிவிப்பு</u>**

தமிழகத்தில் ஆடிப்பட்டத்தில் பயிர் செய்யப்படும் எள்ளுக்கு என்ன விலை கிடைக்கும் என்பது குறித்து திருச்சியில் உள்ள வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் முன்னறிவிப்பு செய்துள்ளது. இது குறித்து அந்த மையம் வெளியிட்டுள்ள செய்தி:

இந்தியாவில் எள் ஒரு முக்கியமான எண்ணெய் வித்துப் பயிராகும். இந்த பயிர்கள் ஆடிப்பட்டத்தில் பயிரிடப்படுகிறது. மேலும், இதன் உற்பத்தி பருவநிலையைப் பொருத்ததாகும். உலக அளவில் 2011-12-ம் ஆண்டில் 78.97 லட்சம் ஹெக்டேரில் எள் பயிரிடப்பட்டது. இதன் உற்பத்தி 40.36 லட்சம் டன்களாகும்.

இந்தியாவில் 2012-13-ம் ஆண்டு கரீப் பருவத்தில் எள் உற்பத்தி 3.40 லட்சம் டன்களாகும். இது 2013-14ம் ஆண்டில் 3.50 லட்சம் டன்களாக உயர்ந்தது. தமிழகத்தில் 2011-12-ம் ஆண்டில் எள் 43,000 ஹெக்டேரில் பயிரிடப்பட்டு 26,000 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் ஈரோடு, கரூர், சேலம், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருப்பூர், புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகியவை எள் பயிரிடப்படும் முக்கியமான மாவட்டங்களாகும்.

தமிழகத்தில் பொதுவாக எள் பயிர் இரண்டு பருவங்களில் பயிரிடப்படுகிறது. தைப்பட்டம் (ஜனவரி - பிப்ரவரி) மற்றும் ஆடிப்பட்டம் (ஜூலை- ஆகஸ்ட்) ஆகிய மாதங்களில் பயிரிடப்படுகிறது. பொதுவாக ஜூலை - ஆகஸ்டில் விதைக்கப்படும் எள் அக்டோபர் முதல் டிசம்பர் வரை சந்தைக்கு வருகிறது.

மேலும், தைப்பட்டத்தில் விதைக்கப்படும் எள் மார்ச் - ஏப்ரல் ஆகிய மாதங்களில் சந்தைக்கு வருகிறது. சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 14 ஆண்டுகள் நிலவிய சிவப்பு எள் விலைகளை ஆராயப்பட்டதில் எள் அறுவடை செய்யப்படும் அக்டோபர் முதல் நவம்பர் மாதங்களில் ஒரு குவிண்டாலுக்கு ரூ.8,500 முதல் ரூ.8,700 வரை விலை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை முன்னறிவிப்பின் அடிப்படையில் விவசாயிகள் எள் சாகுபடி தொடர்பான முடிவுகளை எடுக்கலாம் என அந்த மையம் கூறியுள்ளது.

மேலும் விவரங்கள் அறிய 94435 93971 என்ற செல்போன் எண்ணிலோ அல்லது 0431 2422142 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.